# இலங்கை மத்திய வங்கி

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

2018 மாச்சு 13 | சுற்றறிக்கை | 2018இன் 01ஆம் இலக்கம்

---

### கொடுகடன் தரமிடல்

அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் கொடுகடன் தரமிடல் தொடர்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

1. முக்கியமான இறுதித் திகதிகள்

1.1 நிறுவனத்திற்கான கொடுகடன் தரமிடலைப் பெறுவதற்கும் அதன்படி கீழ் கையொப்பமிட்டவருக்கு அறிவிப்பதற்குமாக, இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொருவருடன் 2018 ஏப்பிறல் 30ஆம் திகதியளவில் உடன்படிக்கையொன்றினை செய்து கொள்ளுதல் வேண்டும்.

1.2 நிறுவனத்திற்கான கொடுகடன் தரமிடலை, கொடுகடன் தரமிடல் முகவரிடமிருந்து பெற்று 2018 ஒத்தோபர் 01ஆம் நாளளவில் பிரசுரித்தல் வேண்டும்.

2. கொடுகடன் தரமிடல் முகவர்களின் பட்டியல்

2.1 இந்நோக்கத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுகடன் தரமிடல் முகவர்களிளொருவரை தெரிவு செய்யவும்.

அ) பிட்ஜ்றேட்டிங் லங்கா லிமிடெட்

ஆ) ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட்

2.2 2.1 இலுள்ள பட்டியலில் ஏதேனும் மாற்றங்கள் இருக்குமாயின் தேவையான நடவடிக்கைகளுக்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அதுபற்றி அறிவிப்பார்.

ஏனைய நிபந்தனைகள்

3.1 2018 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களையும் படுகடன்களையும் திரட்டுவதற்கான அனைத்து விளம்பரங்களிலும் நிறுவனத்தின் வெப்தளத்திலும் பிரசுரிக்கப்படும் நிதியியல் கூற்றுக்களிலும் வியாபாரத் தலங்களிலும் கொடுகடன் தரமிடல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

3.2 கொடுகடன் தரமிடல் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தரமிடல் அறிக்கையினை அறிக்கைத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

டபிள்யு. ரணவீரா
பதில் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி